இணைப்பு

(255 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை ஒட்டியும் இந்திய அரசு தாராள ஓய்வூதிய விதியை தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் அளிக்க இந்திய அரசு செய்துள்ள முடிவைத் தொடர்ந்தும் சென்னை உயர் நீதி மன்றத்தின் கட்டளைப்படியும் தமிழ் நாடு அரசும் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு (அவர்கள் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும்) தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிக்க முடிவு செய்திருக்கிறது. இது தொடர்பாக விரிவான வழிமுறைகளை வகுக்கவும், 1-10-1979 அன்று உள்ளவாறு ஓய்வூதியம் பெற்றிருந்த மாநில அரசு ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்தை மாற்றிக் கணக்கிடுவதற்கான கணிப்புச் சுவடிகளை தயாரிக்கவும் அலுவலர் நிலையில் குழு ஒன்றை நிதித் துறையின் 18-1-1984 நாளிட்ட 30 ஆம் எண் அரசு ஆணையில் மாநில அரசு அமைத்துள்ளது. ஓய்வூதியத் தொகையை மாற்றிக் கணக்கிடுவது என்பது அதிக காலம் பிடிக்கக் கூடிய கடினமான பணியாகும். ஏனெனில், தமிழ் நாடு அரசு அவ்வப்பொழுது இருந்த ஓய்வூதிய அமைப்பை கவனித்து ஓய்வூதியம் தொடர்பான பழைய ஆவணங்களை இது தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும். வழிமுறைகளையும், கணிப்புச் சுவடிகளையும் தயாரிக்கும் பணியை விரைந்து முடிக்க குழு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இதுபற்றி அரசு உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுத்து வருவதனால் இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு எதிர்க்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS